18th July 1957]

MR. SPEAKER : ஒவ்வொரு ஜில்லாவையும் பற்றிக் கேட்டால் சொல்ல முடியுமா ?

SRI R. SRINIVASA IYER : Will the Government please explore the possibilities of getting these catamarans at cheap prices from Andamans and other islands under the control of Government of India ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : That will be considered.

SRI P. M. MUNUSWAMI GOUNDER : சர்க்காரிலிருந்து கட்டுமரங்கள் போன்ற வசதிகள் கொடுப்பதற்கு முன்பு இந்த மீன் பிடிப்பவர்கள் நல்ல முறையில் மீன் பிடித்தும் அவர்கள் ஒழுங்கான முறையில் கடலுக்கு அருகாமையில் பக்கத்தில் இருந்துகொண்டு மீன் பிடித்து தங்கள் வாழ்க்கை தரத்தை வளர்த்து வந்தார்கள். ஆனால் தற்போது நமது அரசாங்கத்திலிருந்து அதிகமான சலுகைகள் கொடுப்பதால் அவர்கள், பொழுது போக்கிற்காக உட்காரும் மெரினா போன்ற இடங்களில் சுகாதாரத்திற்கு விரோதமான முறையில் நடப்பது சர்க்காருக்கு தெரியுமா? அப்படி தெரிந்திருந்தால் அதன் மேல் என்ன நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கிறது ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அரசாங்கம் உதவி செய்வதால் அவர்கள் ஒழுங்கீனமாக நடந்து கொள்ளவில்லை. அவர்கள் தொழில் அபிவிருத்திக்காகவே உதவி செய்யப்படுகிறது.

SRI M. JAGANNATHAN : கட்டுமரங்கள் உபயோகப்படுத்தி மீனவர்கள் அதிகமாக மீன் பிடித்து தங்களுடைய வாழ்க்கையை நடத்த முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு பாய்லோ என்ற விசை படகுகளை வாங்கிக் கொடுத்து உதவி செய்வார்களா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : விசை படகு இப்பொழுது கொடுத்திருக்கிறார்கள். இன்னும் கொடுக்க உத்தேசம் இருக்கிறது.

SRI K. B. S. MANI : இந்தக் கட்டுமரங்கள் சிலோனிலிருந்து 9.40
பிளாக் மார்க்கெட்டில் தஞ்சை, நாகப்பட்டிணம், திருநெல்வேலி ஜில்லாக் a.m.
களுக்கு வருவது அரசாங்கத்தாருக்குத் தெரியுமா ? கவர்ன்மெண்டிலே கொடுக்கப்படுகிற கட்டுமரங்களை வாங்கி தனிப்பட்ட ஒரு சிலருக்கு அதிக விலைக்கு விற்றது சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படித் தெரிந்திருந்தால், அதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : பிளாக் மார்க்கெட் செய்வது சர்க்காருக்குத் தெரிந்து செய்கிற விஷயமல்ல. அப்படித் தெரிந்தால், அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

SRI T. S. RAMASWAMY PILLAI : கன்னியாகுமரி ஜில்லாவில் கட்டு மரங்களுக்கு வேண்டிய கட்டைகள் கேரளாவிலிருந்து இது வரையில் வந்து கொண்டிருந்தன. இப்போது அவைகளை சப்ளை செய்து வரும் வியாபாரிகள் இவ்வாறு செய்வதிலிருந்து தடைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படித் தெரிந்திருந்தால், கேரளாவிலிருந்து கட்டைகள் வரச் செய்ய சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இது வரையிலும் கன்னியாகுமரி ஜில்லா திருவாங்கூர் சர்க்கார் ஆட்சியில் இருந்ததால், அங்கிருந்து கட்டைகள் வந்துகொண்டிருந்தன. இனிமேல், அப்பொறுப்பை சென்னை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு வேண்டியதைச் செய்யும்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : கட்டுமரங்கள் வினியோகிப்பதில் அந்த இனத்தைச் சேர்ந்த அரசியல் தியாகிகளுக்கு அவைகளை இலவசமாகக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

[18th July 1957

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அப்படி இலவசமாகக் கொடுப்பது கொஞ்சம் கடினமான காரியமாகையால், இப்போது அரசாங்கத்தின் மூலமாக கொடுப்பதில் கொஞ்சம் சப்சிடி கொடுத்து வருகிறார்கள்.

SRI A. GOVINDASAMI : கட்டுமரம் வரவழைப்பதற்கான 'இம்போர்ட் லைசென்ஸ்' சென்னையில் இருப்பவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. ஜில்லாக்களில் இருப்பவர்களுக்கும் அந்த லைசென்ஸைக் கொடுக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : சென்னையில் இருப்பவர்களுக்குத்தான் 'இம்போர்ட் லைசென்ஸ்' கொடுக்கவேண்டும் என்ற தனி அபிப்பிராயம் இல்லை. எங்கெங்கெல்லாம் தேவையோ அந்த இடங்களிலெல்லாம் கொடுக்க வேண்டும் என்றுதான் அபிப்பிராயம்.

Machine to extract palmyrah juice

* 141 Q.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Home be pleased to state whether any machine has been invented in this State to extract palmyrah juice?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

Scale of pay of N.G.Os. of Kanyakumari district

* 142 Q.—SRI D. S. AUTHIMOOLAM (on behalf of Sri K. Sattanatha Karayalar) : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to revise the scale of pay of the non-Gazetted Officers of Kanyakumari district?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir, but, the question of integration of the pay scales and rates of dearness allowance of the personnel transferred from the Travancore-Cochin State is under consideration.

SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, how long has it been under the consideration of the Government? May we know up to what date it will be under consideration?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I have already said in answer to the question that it is under consideration, and I have assured the House that an early decision will be taken.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—POINT OF ORDER *RE* THE TERM 'LADIES WITHOUT BEAUTY' WITH REFERENCE TO NORTH ARCOT DISTRICT.

MR. SPEAKER : கனம் மந்திரி அவர்கள் பதிலளிக்கும்போது எவ்வளவு நேரம் பேசுவார் என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : 20 நிமிஷங்கள் தயவு செய்து கொடுத்தால் நன்றாக இருக்கும்.